IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.65/2017

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | DHINAKARAN |
| FATHER'S NAME | : | THANGAVEL |
| VILLAGE | : | GUDIYATHAM |
| OCCUPATION | : | SSI |
| AGE | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 15th day of JULY 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது குடியாத்தம் போக்குவரத்து காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.10.2016 அன்று பரதராமி காவல் நிலைய குற்ற எண்.344/2016, 345/2016 குற்ற வழக்குகளில் ரிமான்ட் பெறுவதற்காக நானும், குடியாத்தம் மகளிர் காவல் நிலைய தலைமை காவலர் நூரிபேகம் என்பவரும் குடியாயத்தம் நீதித்துறை நடுவர் குடியிருப்பு அருகே இரவு சுமார் 23.00 மணிக்கு ஆஜரில் இருந்தபோது குடியாத்தம் கிராமிய காவல் நிலைய குற்ற எண். 448/2016 என்ற வழக்கில் ரிமான்ட் பெறுவதற்காக குடியாத்தம் கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் கௌரி, தலைமை காவலர் பாஸ்கரன், முதல் நிலை காவலர் திலிப்குமார் ஆகியோர் வந்திருந்தபோது அவ்வழக்கில் கண்ட எதிரிகள் கிராமிய காவல் நிலைய காவலர்களை அசிங்கமாக திட்டியும், பணி செய்யவிடாமலும், நாங்கள் வெளியே வந்தால் உங்களை என்ன செய்கிறோம் பார் என்று அசிங்கமாக பேசினார்கள். இதுசம்பந்தமாக கிராமிய காவல் நிலைய உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எந்த வழக்கிற்காக எதிரிகள் நீதிமன்ற காவல் பெறுவதற்காக வந்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு சம்பவம் நடந்தபோது தெரியாது. மேற்படி வழக்கில் எதிரிகள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. எதிரிகள் உதவி ஆய்வாளரை திட்டியதாக சொல்லப்படும் சமயத்தில் பொதுமக்கள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான்.

2. கிளைச்சிறையும், வட்டாச்சியர் அலுவலகமும் பக்கத்தில் உள்ளது என்றால் சரிதான். வட்டாச்சியர் அலுவலகத்தில் எப்போதும் நிறைய நபர்கள் இருப்பார்கள் என்றால், பகலில் இருப்பார்கள். சம்பவ நடந்தது இரவு 11.00 மணி என்பதால் நீதித்துறை நடுவர் குடியிருப்பு இரவு பாதுகாவலரும் மற்றுமு் வட்டாச்சியர் அலுவலக இரவு பாதுகாவலர்கள் இருப்பார்கள் என்றால் சரிதான்.

3. மேற்படி பாதுகாவலர்களை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் எந்த வழக்கிற்காக நீதிமன்ற காவல் பெற வந்திருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றாலும், புகார்தாரர் போலிசார் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் நடந்த சமயத்தில் எதிரிகளின் பெயர், விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்த இரவு பாதுகாவலரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றாலும், போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க தவறாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக நடந்திருந்தால் இரவு பாதுகாவலரை வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பார்கள் என்றால், அதுப்பற்றி எனக்கு தெரியாது. உதவி ஆய்வாளருக்குதான் தெரியும்.

**1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையை 2வது எதிரி தரப்பில் ஏற்று கொள்ளப்பட்டது.+**

**Sd/−R.Saranya, ,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**